தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

CC. No. 12 / 2025

PW :19

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. ஜெயந்தி | த / பெ. | | திரு. |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | தொழில் | : | |
| மதம் | : | | வயது | : | |

2025 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தின் 02 ம் தேதி ....................... பிரிவு 4 ஆணையுறுதி சட்டம் 1969 ன் படி திரு. V. சுந்தரராஜ்,M.L., அவர்கள் முன்பாக ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

02.06.2025

முதல் விசாரணை

நான் தற்போது ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கொட்டையூரில் தலைமையாசிரியராக பணிபுரிந்து வருகிறேன். வலங்கைமான் ஒன்றிய அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கன நாணய சங்கத்தில் தலைவராக 09.05.2013 முதல் 2022 வரை பொறுப்பில் இருந்தேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் பெயர் கவிதா. அவர் மேற்குறிப்பிட்ட சங்கத்தில் நான் தலைவராக பொறுப்பிலிருந்தபோது செயலாளர் பொறுப்பில் கவிதா இருந்தார். எழுத்தராக அன்புச்செல்வி இருந்தார். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார்

என்னை விசாரித்தார்கள். 81 விசாரணை அதிகாரியும் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரி கவிதா செயலாளராக பணியில் இருந்தபோது இந்த சங்கத்தில்



உறுப்பினர்கள் மற்றும் கடன்தாரர்களிடம் பணத்தை பெற்று வங்கியில் வரவு வைக்காமல் கடன் நிலுவை இல்லை என்ற சான்றும் கொடுத்துள்ளார். இந்த விவரம் 81 விசாரணை அதிகாரியின் விசாரணையில் கொடுக்கப்பட்டிருந்த நகலை பார்த்தபோதுதான் எனக்கு தெரியவந்தது. நேசப்பிரியா, அருண்மாறன், ஜான்சிராணி, ராஜேந்திரன், ராம்குமார், அருள், விஜயபாலன் ஆகியோரை எனக்கு தெரியும். அவர்கள் மேற்குறிப்பிட்ட சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் கடனை பெற்றவர்கள். இவர்கள் ஆஜர் எதிரி கவிதாவிடம் நேரடியாக பணத்தை செலுத்திய விவரம் எனக்கு 81 விசாரணை அதிகாரியின் விசாரணையில் தெரியவந்தது. இதற்கு முன்பு மாரிஸ்வரி, நேசக்குமார், மற்றும் அருள்குமார் ஆகியோர் கவிதாவிடம் பணம் கொடுத்த விவரத்தை 81 விசாரணை அதிகாரி விசாரிப்பதற்கு முன்பு எனக்கு தெரியவந்தது. சங்கத்தின் நலனை கருத்தில் கொண்டும் ஆஜர் எதிரி கவிதா பணத்தை செலுத்திவிடுவதாக உறுதி கூறியதால் குறிப்பிட்ட காலக்கெடுக்குள் பணத்தை திரும்ப செலுத்த நான் அறிவுறுத்தினேன். 81 விசாரணை அதிகாரி விசாரணையில் கவிதா வரவு வைத்த விவரம் தெரியவந்தது. நீதிமன்றத்தில் காட்டப்படும் அசாஆ 22 ல் தலைவர் என்ற முறையில் நானும் கையொப்பம் செய்துள்ளேன். இது ஆஜர்

எதிரி கவிதா பணத்தை திரும்ப செலுத்துவதாக ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்ததுதான். ஆஜர் எதிரி கவிதா குற்றசெயலில் ஈடுபட்டதால்



சங்கத்திற்கு நிதி இழப்பு ஏற்பட்டது. ஆஜர் எதிரி குற்றசெயலில் ஈடுபட்டது தவறானதாகும். போலிஸ் என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை

2020 ஆம் ஆண்டில் என்னை போலிசார் விசாரித்தார்கள். 2019 ஆம் ஆண்டு 81 விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார். இந்த இரண்டு விசாரணைகளிலும் எனது முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களைதான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அசாஆ 22 ஆவணம் தொடர்பான விவரங்களை நானும் கையெழுத்து செய்த விவரம் தொடர்பாக போலிஸ்விசாரணையிலும் 81 விசாரணை அதிகாரி முன்பாகவும் சொல்லியுள்ளேன். சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. அசாஆ 22 ஆவணத்தில் மேலே எழுதப்பட்டுள்ள செய்திகளுக்கு நானும் பொறுப்பேற்று குறிப்பிட்ட காலகெடுவிற்குள் முடித்து தருகிறேன் என்று கைப்பட எழுதிகையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். அசாஆ 22 ஐ முழுமையாக படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன். கவிதா பணம் பெற்றுக்கொண்டு வரவு வைக்காமல் கடன்நிலுவையில்லா சான்று

கொடுத்துள்ளார் என்ற விவரத்தை போலிஸ்விசாரணையில் சொல்லியுள்ளேன் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நேசப்பிரியா, அருண்மாறன், ஜான்சிராணி, ராஜேந்திரன், ராம்குமார், அருள், விஜயபாலன்



ஆகியோர் ஆஜர் எதிரி கவிதாவிடம் பணத்தை கொடுத்ததாக சொல்லப்படும் விவரமும் அது சங்க கணக்கில் வரவு வைக்கப்படாமல் இருந்த விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மாரிஸ்வரி, நேசக்குமார் அருண்குமார் ஆகியோர் 81 விசாரணை அதிகாரி விசாரிக்கும் முன்பாகவே என்னிடம் ஆஜர் எதிரிமீது குறைகள் சொன்னார்கள் என்ற விவரத்தை போலிசாரிடமும் 81 விசாரணை அதிகாரியிடமும் சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். சொல்லவில்லை என்றால் சரியல்ல. 81 விசாரணை அதிகாரி விசாரிப்பதற்கு முன்பாகவே எனக்கு எதிரி கவிதா சங்கபணத்தில் முறைகேடுசெய்துள்ள விவரம் தெரியவந்தது என்றும் அதை மத்தியகூட்டுறவு வங்கி அதிகாரியிடமோ அல்லது மேல்அதிகாரிகளிடமோ தெரிவித்தேனா என்றால் தெரிவிக்கவில்லை, புகார் எதுவும் கொடுக்கவில்லை. சங்கத்தின் நடவடிக்கைகள் நிர்வாக குழுவின்கீழ் நடைபெறுவதால் நான் அந்த விவரங்களை மேல் அதிகாரியிடம் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். 81 விசாரணையின் அடிப்படையில் சங்க நிதிஇழப்பு தண்ட வரி கேட்பு அறிவிப்பு

அறிவிக்கப்படும் என்றால் சரிதான். சங்கத்திற்கு எவ்வளவு நிதிஇழப்பு ஏற்பட்டது என்பதை தலைவர் என்ற முறையில் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். அந்த தண்டவரி கேட்பு அறிவிப்பின் படி இழப்பை யார் யார் திருப்பி செலுத்தவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது யார்



யார் பெயர் குறிப்பிடப்பட்டது எத்தனை பேரின் பெயர் குறிப்பிடப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. தண்டவரி கேட்பு அறிவிப்பில் என்னுடைய பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது என்றும், அதை தெரிந்துகொண்டே தற்போது வழக்கிற்காக ஞாபகம் இல்லை என்று தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தண்டவரி கேட்பு அறிவிப்பின்படி எனது பெயரும் அதில் உள்ளது என்றால் சரியல்ல. எனது தலைவர் பதவிகாலம் 2013 லிருந்து 2022 வரை என்றால் சரிதான். அது இரண்டு பதவிகாலங்களாகும். இந்த இரண்டு பதவிகாலங்களில் நான் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்றால் சரிதான். எனது கணவர் பெயர் குணசேகரன். அவர் வியாபாரம் செய்துவருகிறார். அவர் அதிமுக கட்சியில் வலங்கைமானின் நகர செயலாளராக இருந்தார். அவர் வலங்கைமான் தொடக்கவேளாண்மை கூட்டுறவு சங்க தலைவராக இருந்தார். நான் தலைவராக இருந்த சங்கத்தில் பொறுப்பு வழி மத்திய கூட்டுறவு வங்கியின் இயக்குநராகவும் இருந்தேன். நான்

பதவி வகித்த சங்கத்திற்கு நிர்வாக குழு பொதுக்குழு என்ற இரு குழுக்கள் உண்டு . நிர்வாக குழு மாதம் ஒருமுறையும், பொதுக்குழு ஆண்டுக்கு ஒரு முறையும் கூட்டப்படவேண்டும் என்றால் சரிதான். நான் தலைவர் பதவி வகித்த காலகட்டத்தில் மாதாமாதம் நிர்வாக குழு கூட்டம் நடைபெற்றது என்றால் சரிதான். நிர்வாக குழு கூட்டத்தில் நடைபெறும் சங்க நிலைகளை தீர்மான



புத்தகத்தில் பதிவுசெய்யவேண்டும் என்றால் சரிதான். நிர்வாக குழுவில் மாதாந்திர வரவு செலவுகளை அங்கீகரித்தல் கடன் கேட்போரின் மனுக்களை பரிசீலனை செய்து ஒப்புதல் வழங்குவது என்றால் சரிதான். எங்கள் சங்கத்திலிருந்து வழங்கப்பட்ட கடன்கள் அனைத்தும் சங்க உறுப்பினர்களின் ஒப்புதல் பெற்று வழங்கப்பட்டது. நான் தலைவராக இருந்த காலத்தில் ஆஜர் எதிரியும் செயலாளராகவும், அன்புச்செல்வி எழுத்தராகவும் பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான. நிர்வாக குழுவில் எதிரிமீது எந்த ஒரு புகாரும் பெறப்படவில்லை என்றால் சரிதான். ஆண்டுக்கொருமுறை பொதுகுழு கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களும் கலந்துகொள்வது அவர்களுக்கு பரிசுபொருட்கள் வழங்குவது போன்றவை நடைபெறுவது வழக்கம். 2013 ஆம் ஆண்டு நடந்த முதல் பொதுக்குழுவில் அப்போதைய உணவு அமைச்சர் திரு.காமராஜ் கலந்துகொண்டார் கூட்டம் விமர்சையாக நடைபெற்றது.

பொதுக்குழு கூட்டம் நடைபெறும்போது அதில் உள்ள வரவுசெலவுகளை தோராயமாக ரூ10 ஆயிரம் வரை செலவுசெய்யவேண்டும் என்பதுதான் சங்க விதியாகும். ஆனால் அமைச்சர் கலந்துகொண்ட பொதுக்குழுவில் சங்க பணத்தில் செலவு செய்தோமா என்றால் இல்லை. பொதுக்குழுவிலும் சங்க நடவடிக்கைகளில் யாருக்கேனும் யார்மீதாவது புகார் உள்ளதா என்பதை கேட்டு பதிவுசெய்யப்படும் என்றால் சரிதான். அவ்வாறான காலங்களில் ஆஜர்



எதிரிமீது புகார் கொடுக்கப்பட்டு பதிவு உள்ளதா என்றால் பொதுக்குழுவில் பதிவுசெய்திருக்கிறேனா என்று ஞாபகம் இல்லை. நிர்வாக குழுவில் பதிவுசெய்திருக்கிறேன். எந்ததேதி என்று ஞாபகம் இல்லை. இந்த விவரத்தை போலிசார் விசாரணையிலோ 81 விசாரணை அதிகாரியிடமோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. சங்கத்திற்கு ஆண்டுதணிக்கை உள்ளது. ஆண்டுதணிக்கை அறிக்கையை பொதுக்குழு அங்கீகரிக்கவேண்டும். அந்த ஆண்டுதணிக்கையில் எதிரிமீது ஏதேனும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதா என்றால் 2017-2018 ஆம் ஆண்டிற்கான ஆண்டுதணிக்கையில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சொல்லப்பட்டுள்ளது. இந்த விவரத்தை 81 விசாரணைஅதிகாரியிடமோ போலிசாரிடமோ சொல்லியுள்ளேன் என்றால்

குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன். சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. ரசீது புத்தகத்தில் உள்ளதலைவர் என்ற இடத்தில் நான்தான் கையெழுத்து போடும் பொறுப்பு எனக்குள்ளது என்றால் சரிதான். கடன்நிலுவையில்லா சான்றில் தலைவர்தான் கையொப்பமிடவேண்டும் என்றால் சரிதான். அதுபோல் என் கையெழுத்துடன் உள்ள கடன்நிலுவையில்லா சான்று வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என்னால் வழங்கப்பட்ட கடன் நிலுவையில்லா சான்றும் இந்த விசாரணையில்



உட்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். சங்க உறுப்பினர்களில் ஆசிரியர்களும் பஞ்சாயத்து யூனியன் அலுவலர்களும் உண்டு என்றால் சரிதான். ஆசிரியர்கள் பலபேர் கடன்தொகையை பெற்றுக்கொண்டு சரிவர கடனை திரும்ப செலுத்தாமல் தவறிய கடன்களும் உண்டு என்றால் எல்லா ஆசிரியர்களும் அப்படி இல்லை. சிலருக்கு தவறிய கடன் உள்ளது. ஆசிரியர்களுக்குரிய கடன்தொகையை பிடித்தம் செய்யவேண்டிய டிமாண்ட் ல் தலைவர் என்ற முறையில் நான் கையெழுத்து போடவேண்டும் என்றால் சரிதான். அவசர தேவைக்காக கடன் கேட்போர், மருத்துவசெலவிற்காக கடன்கேட்போர் களுக்கு அவசர அவசியம் கருதி நிர்வாக குழு கூட்டத்தில் கூடி ஆலோசனை செய்து உடனடியாக அங்கீகரிக்கப்பட்டு சங்கத்தின்மூலம்

கடன் வழங்கப்படும் என்றால் சரிதான். கூடுதல் நிதி தேவை தொடர்பாக மத்திய கூட்டுறவு வங்கியில் கூடுதல் விண்ணப்பங்கள் தொடர்பாக நிதிவேண்டி நிர்வாக குழு ஒப்புதலுடன் கடிதம் அனுப்பப்படும் என்றால் சரிதான். சங்கத்தினுடைய அனைத்து பேரேடுகள் துறை சார்ந்த கடிதங்கள், மத்திய கூட்டுறவு வங்கியின் கடிதங்கள் அனைத்திலும் தலைவர் என்ற முறையில் நான் கையெழுத்து போடவேண்டியது அவசியம் என்றால் சரிதான். சங்கத்திற்கு அனுப்பப்படும் கடிதங்களில் நான் கையெழுத்து போடவேண்டும் என்றால் சரிதான். மத்திய கூட்டுறவு வங்கி அலுவலர்களும் எங்கள்



சங்கத்தினை மாதந்தோறும் ஆய்வுசெய்து அறிக்கை சமர்ப்பிப்பார்கள் என்றால் சரிதான். கூட்டுறவு சங்க துணை பதிவாளர் மற்றும் இணைபதிவாளர் ஆகியோர் அடிக்கடி எங்கள் சங்கத்திற்கு திடீர் ஆய்வு மேற்கொள்வார்கள் என்றால் சரிதான். 2013 லிருந்து 2019 வரையிலும் நான் தலைவராக இருந்தகாலத்தில் சங்கத்தில் எந்த குறைபாடுகளும் காணப்படவில்லை என்றால் சரியல்ல. 2017 ல் சில சில குறைபாடுகள் இருந்தது. இந்த குறைபாடுகள் குறித்து ஆஜர் எதிரியிடம் விளக்கம் கேட்டோ அல்லது மேல் அதிகாரிகளிடம் தபால்மூலமாக தகவல் தெரிவித்து எந்த ஒரு பதிலும் உள்ளதா என்றால் இருக்கலாம். ஞாபகம் இல்லை. எங்கள் சங்க எழுத்தர்

அன்புசெல்வியின் உறவினர் ஒருவர் திருவாரூர் மாவட்ட இணைபதிவாளர் அலுவலகத்தில் உள்ளார் என்றால் அவரின் மாமா உள்ளார். அவர் பெயர் முத்துரெங்கன். எழுத்தருக்கு செயலாளராக பதவி உயர்வு வழங்கவேண்டும் என்று கோரிக்கை இருந்தது என்றால் இல்லை. அவ்வாறு ஒரு கோரிக்கை இருந்தது என்றும் அதனை மறைத்து வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டபிறகு எழுத்தர் அன்புசெல்விதான் செயலாளராக நியமிக்கப்பட்டார் என்றால் சரிதான். இன்று வரை அவர்தான் சங்க செயலாளராக உள்ளார். சங்கத்தில் எத்தனை பேரேடுகள் பராமரிக்கப்பட்டது என்று சொன்னால் 15 க்கும் மேற்பட்ட



பதிவேடுகள் இருக்கலாம். என்னுடைய நிர்வாகத்தில் சங்கத்தில் எந்த ஒரு குறைகளும் இல்லாத நிலையில் ஆஜர் எதிரிகவிதாவின்மீது தவறான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து எழுத்தர் அன்புசெல்வியை செயலாளராக ஆக்கவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் ஆஜர் எதிரி தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார் என்றும் பின்னிட்டு நிரந்தர பணிநீக்கம்செய்யப்பட்டார் என்று சொன்னால் சரியல்ல. தண்டவரிகேட்பு அறிவிப்பு தொடர்பாக மேல்அதிகாரிகளிடம் மேல்முறையீட்டு கடிதமோ அல்லது விளக்க கடிதமோ கொடுத்தேனா என்றால் இல்லை. தண்டவரி

அறிவிப்பில் சங்கத்திற்கு நிலுவையுள்ளதாக என்னுடைய பெயரும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்றும் எனது கணவரின் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி என்னை விடுவித்துக்கொண்டு ஆஜர் எதிரிமீது மட்டும் குற்ற ஈர்ப்பு வரும்வகையில் தயார் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. நான் வழக்கிற்கு ஏற்றார்போல் உண்மைகளை மறைத்து எதிரிக்கு எதிராக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரிகளின் பெயர்களில் என்னுடைய பெயரும் இணைக்கப்பட்டிருந்தால் என்னுடைய தலைமையாசிரியர் பணிக்கு ஆபத்து ஏற்படும் என்பதால் எனது கணவரின் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி வழக்கிலிருந்து என்னை விடுவித்துக்கொண்டு விட்டேன் என்றால் சரியல்ல. சங்கத்தின் பேரேடுகளை



சங்க செயலாளரும் எழுத்தரும் பராமரித்து வந்தார்கள் என்றால் வரவுசெலவு புத்தகம், ரொக்கபுத்தகம், கடன்அனுமதி புத்தகம், கடன்சம்பந்தமாக வங்கிக்கு அனுப்பியது தினபேரேடு ஆகியவற்றை எதிரி பார்த்துக்கொண்டார். துணை பேரேடு, ரசீது புத்தகம், எழுத்தர் பராமரித்து வந்தார். இதை தவிர மற்ற பேரேடுகளை இருவரும் பராமரித்து வந்தார்கள் என்றால் சரிதான். செயலாளருக்கும் எழுத்தருக்கும் பராமரிக்கக்கூடிய பேராடுகளை குறித்து தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என்றால் சரிதான். சங்கத்தில்

வரவு வரக்கூடிய பணம் சில சமயங்களில் என்மூலமாகவும் வரவு வைக்கப்படும் என்றால் சரியல்ல.

நீதிமன்ற கேள்வி : சங்கத்தில் தலைவராக நீங்கள்பொறுப்பு வகிக்க சம்பளம் எதுவும் கொடுப்பார்களா என்றால் இந்த பொறுப்பு கௌரவ பதவியாகும். நிர்வாக குழு கூட்டம் போடும்போது கூட்டத்தில் கலந்து கொண்டதற்காக Sitting Fees மட்டும் கிடைக்கும். மேற்படி சங்கத்தில் கௌவர தலைவர் பதவியானது 5 வருட காலமாகும். நான் மேற்படி சங்கத்தில் 09.05.2013 லிருந்து 7 வது மாதம் 2022 ஆம் ஆண்டுவரை தொடர்ந்து தலைவராக இருந்தேன். நான் 09.05.2013 ல் தலைவராக பொறுப்பேற்கும்போது எதிரி அந்த சங்கத்தின் செயலாளராக பொறுப்பிலிருந்தார். நான் வாரத்திற்கு ஒரு முறை கூட்டுறவு சங்கத்திற்கு



நேரில் சென்று எனக்குரிய வேலைகளை பார்ப்பேன். அசாஆ 22 ல் சொல்லப்பட்டுள்ள நபர்களுக்கு வழங்கப்படவேண்டிய தொகையை செலுத்தி முடித்துவிட்டேன்.

நீதிமன்ற கேள்வி மேற்குறிப்பிட்ட விவரங்களை மேல் அதிகாரியான கூட்டுறவு துணைபதிவாளருக்கும் உயர் அதிகாரிகளுக்கும் ஏன் தெரிவிக்கவில்லை. அதற்குரிய காரணம் என்ன.

கூட்டுறவு சங்கத்தின் நலன்கருதியும் பணத்தை திருப்பி கொடுத்துவிடலாம் என்ற முறையிலும் மேல் அதிகாரிகளை தொந்தரவு செய்யவேண்டாம் என்ற

எண்ணத்திலும் தெரிவிக்கவில்லை. நிர்வாக குழு உறுப்பினர்கள் 5 நபர்களில் ஒருவர் இறந்துவிட்டதால் எனக்கு அறுதிபெரும்பாண்மை கிடைக்காததால் நான் பதவி நீக்கம் செய்யப்பட்டேன். தற்போது நான் அந்த சங்கத்தில் உறுப்பினர்தான்.

V SUNDARARAJ

Digitally signed by V SUNDARARAJ
Date: 2025.06.02 17:09:11 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்.